# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 211/2025 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : செந்தில் (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : பழனிச்சாமி |
| Village | : உலுப்பக்குடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of April 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 7.30 மணியளவில் உலுப்பக்குடி பாலம் அருகே நான், எனது தம்பி ரமேஷ் உடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து நத்தம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்புறமாக திண்டுக்கல்லில் இருந்து வந்த டாடா ஏஸ் வாகனம் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனது வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. என் தம்பி ரமேஷ்–க்கு விலாவில் ரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது. விபத்து ஏற்பட்டதும் எங்களை அவசர ஊர்தியில் ஏற்றி என் தம்பி ரமேஷை நத்தம் அரசு மருத்துவ மனைக்கும், என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கும் கொண்டு சென்றார்கள். அன்று இரவே திண்டுக்கல்லிலிருந்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் 8

மாதங்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது காலில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்து பிளேட் வைக்கப்பட்டுள்ளது. தற்போதும் என்னால் சரியாக நடக்க முடியவில்லை. போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது, (**அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) புகார் வாக்குமூலத்தில் நான் செய்த கையொப்பம் ஆனது விபத்து நடந்து மூன்று மாதங்கள் கழித்து நான் வீட்டில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் எழுதப்படாமல் இருந்தது என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் சம்பவத்தன்று மது அருந்தி இருந்தோம் என்றால் சரிதான். சாலையை கடக்கும் போது முறையான விதிகளை பின்பற்றாமல் கடந்ததில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். டம் என்று சத்தம் கேட்டு கீழே விழுந்தது தான் தெரியும் யார் வந்து மோதினார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். மருத்துவர் விசாரித்த போது உலுப்பக்குடி பேருந்து நிறுத்தம் அருகே விபத்து ஏற்பட்டதாக சொன்னேன் என்றால் சரிதான். உலுப்பக்குடி பேருந்து நிறுத்தம் மற்றும் பாரதி வீடு இடையே சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனது தம்பி முறையாக சாலை விதிகளை பின்பற்றாமல் ரோட்டை கடக்க முயன்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.17 14:13:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.211/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 211/2025 | LW- 2 | PW- 2 |

| | |
|---|---|
| Name | : ரமேஷ் (காயம்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : பழனிச்சாமி |
| Village | : உலுப்பக்குடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of April 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து திருப்பூரில் டெய்லர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 7.00, 8.00 மணியளவில் நானும், எனது அண்ணனும் எனது அண்ணனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எனது அண்ணனை பின்னால் அமர வைத்து நான் ஓட்டிக்கொண்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து தெற்கில் திரும்பும்போது எங்களுக்கு பின்புறமாக மேற்கிலிருந்து வந்த டெம்போ போன்ற வாகனம் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு வலதுபக்க விலாவில் மூன்று எலும்புகள் உடைந்தும், கை, கால்களில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. மேலும் எனது தலையில் அடிபட்டு இடது காதில் ரத்தம் வழிந்தது. என் அண்ணன் செந்திலுக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எங்கள் இருவரையும் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள்.

பின்னர் அங்கிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்திருந்தார்கள். பின்னர் நாங்கள் திண்டுக்கல்லில் இருந்து மீண்டும் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். நான் 7 நாட்களும், என் அண்ணன் 6 மாதங்களும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) சம்பவ சமயம் நானும், எனது அண்ணனும் மது அருந்தி இருந்தோம் என்றால் சரிதான். உலுப்பக்குடி பேருந்து நிறுத்தத்திற்கும், பாரதி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 300 மீட்டர் இருக்கும். டம் என்று சத்தம் கேட்டு கீழே விழுந்து விட்டோம் என்றாலும், மோதிய வாகனத்தின் விபரங்கள் தெரியாது என்றாலும் சரிதான். மருத்துவர் என்னை விசாரித்த போது விபத்து ஆனது உலுப்பக்குடி பேருந்து நிறுத்தம் அருகே நடந்ததாக சொன்னேனா என்றால் மருத்துவர் என்னை விசாரிக்கவில்லை. உலுப்பக்குடி பேருந்து நிறுத்தம் அருகே டீக்கடைகள் உள்ளது என்றாலும், இரவு 8 மணி வரை ஆட்கள் இருப்பார்கள் என்றாலும் சரிதான். நான் சாலையை கடக்கும் போது இரு புறமும் சரியாக பார்த்து திரும்பவில்லை என்பதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் முன்புறம் பார்த்தேன் பின்னால் பார்க்கவில்லை. நான் பின்னால் பார்த்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். நானும், எனது அண்ணனும் வாகன விபத்து இழப்பீடு கேட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக எங்கள் மீது உள்ள தவறை மறைத்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.17 14:13:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 211/2025 | LW- 3 | PW- 3 |

| | |
|---|---|
| Name | : செல்லமணி (கேள்வியுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : செந்தில் |
| Village | : உலுப்பக்குடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 32/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of April 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து தனியார் மில்லில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. கடந்த 11.11.2024ம் தேதி மாலை சுமார் 6.45 மணியளவில் என் கணவர் இருசக்கர வாகனத்தில் அவரது தம்பி ரமேஷ் உடன் பின்னால் அமர்ந்து கொண்டு கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது பாலத்தின் அருகே திண்டுக்கல்லில் இருந்து வந்த மினிடோர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்டு ஓடினார்கள். அதை கேட்டு நானும் சென்ற பார்த்தபோது என் கணவரின் வலது கால் உடைந்திருந்தது. என் கணவரின் தம்பி ரமேஷ் மயக்கமாக கிடந்தார். அவர்களை பார்த்ததும் நானும் மயங்கிவிட்டேன். பின்னர் காயம்பட்ட என் கணவரையும், அவரது தம்பியையும் நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அங்கு முதலுதவி பெற்றபின் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

பின்னர் அன்றைய தினமே திண்டுக்கல்லில் இருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு என் கணவர் 6 மாதங்களும், என் கணவரின் தம்பி ரமேஷ் 3 வாரங்களும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். மினி டோர் வாகனம் ஓட்டியவரின் பெயர், விபரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். போலீசார் என்னை போனில் விசாரித்தார் என்றால் முதலில் போனில் விசாரித்துவிட்டு, பின்னர் வீட்டிற்கு வந்து விசாரித்தார். எனது கணவரும், அவரது தம்பியும் சம்பவத்தின் போது மது அருந்தி இருந்தார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.17 14:13:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.211/2025

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 211/2025 LW- 5 PW- 4

| | |
|---|---|
| Name | : சுரேஷ் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : ராமன் (என்ற) ராமசாமி |
| Village | : உலுப்பக்குடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of April 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் எங்கள் வீட்டிலிருந்து 100 அடி தூரத்தில் விபத்து நடந்தது. அதில் செந்தில் மற்றும் ரமேஷ் ஆகியோர் காயம் அடைந்திருந்தனர். அந்த சம்பவம் குறித்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நானும், மற்றொரு நபரும் கையொப்பம் செய்தோம். அவர் யாரென்று தெரியவில்லை. (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) என்னுடன் மற்றொரு பெண்பாலர் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். அவரது பெயர் விபரம் தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த சமயம் இரவு 7 அல்லது 8 மணி இருக்கும். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் முன்பு அந்த ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்